## நாட்டுப்புறவியல் என்றால் என்ன? விளக்குக.

folk lore என்னும் சொல் நாட்டுப்புறவியலைக் குறிக்கிறது. 1846க்குப் பின்னர் வில்லியம் ஜான் தாம்சன் என்பவரால் உருவாக்கப்பெற்றது. 19ம் நூற்றாண்டில் ஐரோப்பிய நாடுகளில் folk என்னும் சொல் விவசாய மக்களைக் குறித்தது. பின்னர் படிப்பறிவில்லாத நாட்டுப்புற மக்களைக் குறித்தது. பொதுவான தொழில், மொழி, சமயம் முதலியவற்றைப் பின்பற்றும் குழுவை 'folk' என்பர். 'lore' என்பதற்கு மரபுச் செய்தித் தொகுதி என்றும் வழக்காறு என்றும் பொருள் கொள்ளலாம்.

`folklore'என்றசொல்நாட்டுப்புறமக்களின்வழக்கங்கள்,நம்பிக்கைகள்,மரபுகள்,பாடல்கள்,கதைகள்,பழமொழிகள்,விடுகதைகள்,மந்திர தந்திரங்கள்ஆகியவற்றைக் குறிக்கிறது.

folkloreஎன்னும்சொல்லுக்குதமிழ்வடிவமாகநாட்டார்பாடல்கள்,நாட்டுப்புறப்பாடல்கள்,நாடோடிப் பாடல்கள்,நாட்டுப்பாடல்கள்,பாமரர்பாடல்கள்,வாய்மொழிப்பாடல்கள்,எழுதா இலக்கியம் எனப் பலபெயர்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் நாட்டுப்புறப்பாடல்கள் என்னும் பெயரே இன்று நிலைத்துவிட்டது.

**நாட்டுப்புறவியல் வகைகள்:**

நாட்டுப்புற இலக்கியம்,நாட்டுப்புறக் கலைகள் நம்பிக்கைகள் என்று வகைப்படுத்தப்பட்டுள்ளன.

**நாட்டுப்புற இலக்கியம்:**

நாட்டுப்புறப்பாடல்கள்,நாட்டுப்புறக்கதைகள்,நாட்டுப்புறக்கதைப்பாடல்கள்,பழமொழிகள்,விடுகதைகள்,புராணங்கள் என வகைப்படுத்தப்படுகின்றன.

**நாட்டுப்புறக்கலைகள்:**

நாட்டுப்புறக்கைவினைப்பொருட்கள்,நாட்டுப்புறநம்பிக்கைகள்,நாட்டுப்புறபழக்கவழக்கங்கள்,நாட்டுப்புத் தெய்வங்கள், நாட்டுப்பற விளையாட்டுகள்,நாட்டுப்புற மருத்துவம் முதலியன அடங்கும்.

**நாட்டுப்புறப்பாடல்களின் தொகுப்பாசிரியர்கள்:**

நா.வானமாமலை - 1.தமிழ்நாட்டுப் பாமரர் பாடல்கள்

2.தமிழ்நாட்டுப் பாடல்கள்

செ.அன்னகாமு - ஏட்டில் எழுதாக் கவிதைகள்

கி.வ. ஜகந்நாதன் - மலையருவி

மு.அருணாசலம் - காற்றிலேமிதந்த கவிதைமு.வை.அரவிந்தன் - தமிழக நாட்டுப்பாடல்கள்

## நாட்டுப்புறக் கதைகள் :

நாட்டுப்புறக்கதைகள் வாய்மொழியாக ஒரு மனிதனிடமிருந்து மற்றொரு மனிதனுக்குச் சொல்வதாகும். நாட்டுப்புற வழக்கில் கதைக்குக் கால் இல்லை என்பார்.

வாழ்க்கைப்பிரச்சனைகள்,ஆசை,துன்பம்,சாதிவேறுபாடு,காதல்,ஒழுக்கம்,வேதனை,பண்பாடு,இயலாமை,மன உணர்வெழுச்சி,மந்திரம்,நீதி போன்ற பொருண்மையில் கதைகள் உருவாவது உண்டு.

## நாட்டுப்புறக் கதைவகைகள்:

1.புராணக்கதைகள் 2.பழமரபுக் கதைகள் 3.விலங்குக் கதைகள் 4.சாதாரணக் கதைகள் 5.நகைச்சுவைக் கதைகள் 6.வாய்ப்பாட்டுக்கதைகள் 7.நீதிக்கதைகள் 8.குடும்பக்கதைகள் 9.சமயக்கதைகள் 10.மந்திரக்கதைகள் எனப் பலவகையாக அமைகின்றன.

நாட்டுப்புறக்கதைகள் 16ம் நூற்றாண்டிற்குப் பிறகே அச்சுவடிவில் வெளிவந்தன.

## கதைகளின் நோக்கம்:

மக்களுக்கு அறக்கோட்பாட்டை உணர்த்துகிறது. நாட்டுப்புற மக்களுக்கு முறைசாராக் கல்வியைப்போன்று உலகியல் அறிவை வழங்குகிறது. நீதிப்போதனைக் கறஞ்சியமாக விளங்குகிறது. பண்பாட்டுக்கூறுகளை மீட்டுருவாக்கம் செய்ய உதவுகின்றன.

## நாட்டுப்புறக்கதைகளின் தொகுப்புகள்:

மயில்ராவணன் கதை,அரபுக் கதைகள்,பழங்காலக் கதைகள்,தெனாலிராமன் கதைகள்,பஞ்சதந்திரக் கதைகள்,விக்கிரமாதித்தன் கதைகள்,மரியாதைராமன் கதைகள்

## நாட்டுப்புறக்கதைகளைத் தொகுத்து வெளியிட்டோர்:

வீராச்சாமி நாயக்கர்,வீராச்சாமி செட்டியார்,நடேச சாஸ்திரி,அ.லெ.நடராஜன், அரு.இராமநாதன், வை.கோவிந்தன்,கி.ராஜநாராயணன், சு.சண்முகசுந்தரம், முல்லை முத்தையா

## வினாக்கள்:

1. நாட்டுப்புறக் கதைகள் என்றால் என்ன?
2. நாட்டுபுறக் கதைகளின் நோக்கம் யாது?
3. நாட்டுபுறக்கதைகளின் வகைகள் யாவை?
4. நாட்டுப்புறக் கதை நூல்கள் சிலவற்றை குறிப்பிடுக.
5. நாட்டுப்புறக் கதைகளைத் தொகுத்து வெளியிட்டோர் சிலரைக் குறிப்பிடுக.
6. நாட்டுப்புற வழக்கில் கதைகள் குறித்து வழங்கப்படும் கருத்து யாது?
7. நாட்டுப்புறக்கதைகள் குறித்துக் கட்டுரை வடிவில் விடை தருக,

## நாட்டுப்புறக் கதைப்பாடல்கள்:

கதையைப் பாடலாகப் பாடப்படுவதையே கதைப்பாடல்கள் என்பர். அது ஒரு கதையாகவோ அல்லது பல உட்கதைகளைக் கொண்டதாகவோ இருக்கலாம். ஆங்கிலத்தில் இதனை **BALLAD** என்று கூறுவர். கதைப்பாடல்கள் பெரும்பாலும் மக்களின் பேச்சுமொழியிலேயே அமைந்திருக்கும்.

## கதைப்பாடல்களின் பல்வேறு பெயர்கள்:

அம்மானை, பாட்டு, மாலை, வெற்றி, ஏற்றம், கும்மி, குறவஞ்சி, காவியம், வனவாசம்,சோபனம், கீர்த்தனை, சண்டை, படைப்போர், யாகம்,குறம், சிந்து, வில்லுப்பாட்டு

## கதைப்பாடல்கள் காட்டும் நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள்:

பழைய நம்பிக்கைகளையும் பழக்கவழக்கங்களையும் உயிர்த்தெடுக்கும் தன்மையோடு விளங்குகின்றன. திருமணச்சடங்கு, சாதிவிதிகள், பரிசம் கொடுத்துப் பெண்ணைத் திருமணம் செய்தல், சகுனம் பார்த்தல், மணப்பெண்ணிற்குச் சீதனம் அளித்தல், இறந்தவருக்குக் கோயில் கட்டி வழிபடுதல் போன்ற பல நிகழ்வுகள் பண்டைய நம்பிக்கைச் சார்ந்தவை.

## கதைப்பாடலின் தோற்றமும் வளர்ச்சியும்:

கதைப்பாடலுக்குத் தமழில் அம்மானை என்ற பெயரும் உண்டு. அம்மானை என்ற சொல் சிலப்பதிகாரத்தில் காணப்பெறுகின்றது, அம்மானை என்ற சொல்லிலிருந்து அம்மானை வரி, அம்மானைப் பாட்டு, அம்மானைக் காய், அம்மானை மடக்கு போன்ற சொற்கள் பிறந்தன. அம்மானை என்பதற்கு தாய், தலைவி, ஆடுங்கருவி, தீ போன்ற பொருளும் உண்டு,

அம்+மனை=அழகிய மனையில் ஆடும் மகளிரின் ஆடல், பாடல் என்று பொருள் கொள்வர். பெண்களின் விளையாட்டிலிருந்து வளர்ச்சி பெற்றதே கதைப்பாடலாகும். கதைப்பாடலின் தோற்றம் 16 ம் நூற்றாண்டாகும்,

## கதைப்பாடல்களின் பெயர்கள்:

அரிசந்திரன் கும்மி, மன்மதன் சரிதம், இராமப்பய்யன் அம்மானை, அல்லி அரசாணி மாலை,காமன் பாட்டு, திவான் வெற்றி, பஞ்சபாண்டவர் வனவாசம்.

## கதைப்பாடலின் அமைப்பு:

நான்கு பகுதிகளைக் கொண்டவை.

1.காப்பு அல்லது வழிபாடு 2.குருவணக்கம் 3.வரலாறு 4.வாழி என்பன.

கதைப்பாடல்களைத் தொடங்கும் முன்பு இறைவனை வணங்கிப் பாடுவதைக் காப்பு என்பர். பெரும்பாலும் விநாயகரைப் பற்றியும் அந்தந்த ஊரிலிருக்கும் நாட்டுப்புறத் தெய்வங்களைப் பற்றியும் பாடுவர். காப்புப் பாடலை அடுத்து இன்ன கதையினைப் பாடப் போகிறோம் என்று இதனைப் பாட்டாகவோ உரைநடையிலோ கூறுவர்.

குருவணக்கம் என்பது தனக்குப் பாடம் சொல்லிக்கொடுத்த குருவிற்கு வணக்கம் தெரிவிப்பது. இதனை குருவடி என்று கூறுவர். அவையடக்கம் பெரும்பாலும் உரைநடையிலே அமைவது உண்டு.

பின்னர் கதையின் வரலாறு துவங்கப்பெறும். கதைப்பாடலின் இறுதிப்பகுதி வழிபடுதலாகும். கதை கேட்போரும் மற்றோரும் கடவுளர் அனைவரின் அருள் பெற்று வாழ்க என்று வாழ்த்துவர்.

## கதைப்பாடல்களின் வகைகள்:

தெய்வீகக் கதைப்பாடல்கள், புராணக் கதைப்பாடல்கள், சமூகக் கதைப்பாடல்கள், வரலாற்றுக் கதைப்பாடல்கள்.

கதைப்பாடல்கள் பெரும்பாலும் வீரக்காவியங்களாக அமைந்துள்ளன. சமூக சீர்கேடுகளையும், பழக்கவழக்கங்களையும், நம்பிக்கைகளையும் விளக்குகின்றன. வரலாற்றையும் அறிந்துகொள்ள உதவுகிறது. கதைப்பாடல்களைப் பற்றிய ஆய்வுகள் நாட்டுப்புறவியல் ஆய்விற்கு மட்டுமல்லாது வரலாறு, சமூகவியல் மானுடவியல், மொழியியல் நோக்கிலும் ஆய்வு செய்வதற்கு ஏற்றது. கதைப்பாடல்கள் மண்ணின் மணத்தை எடுத்துரைக்கும் வாழ்வியல் பெட்டகமாக உள்ளது.

### வினாக்கள்:

1. கதையைப்பாடலாகப் பாடப்பெறுவதற்கு என்ன பெயர்?
2. கதைப்பாடலை ஆங்கிலத்தில் என்னவென்று அழைப்பர்?
3. தமிழிலில் கதைப்பாடலை என்னவென்று அழைப்பர்?
4. கதைப்பாடல்கள் என்றால் என்ன?
5. கதைப்பாடல்களின் வகைகள் யாவை?
6. கதைப்பாடல்கள் காட்டும் நம்பிக்கை, பழக்கவழக்கங்கள் யாவை?
7. அம்மானை – விளக்குக
8. கதைப்பாடலின் அமைப்பு குறித்து விளக்குக
9. கதைப்பாடல்களின் பல்வேறு பெயர்கள் யாவை?
10. கதைப்பாடலின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்து கட்டுரை வரைக,

## பழமொழிகள்:

### பழமொழீகள்-விளக்கம்:

அறிவு வளர்ச்சியிலே பிறந்து சுருக்கம், தெளிவு, பொருத்தம் ஆகிய பணபுகளால் இவ்வுலகில் வாழ்பவை பழமொழிகள். மூதுரை, முதுமை, மொழிமை, முன்சொல், முதுசொல், பழஞ்சொல் என ஆறு பொருள்கள் இருப்பதாக சேந்தன் திவாகரம் கூறுகிறது.

மலையாளத்தில் பழஞ்சொல் என்றும், தெலுங்கில் நாதுடி என்றும், கன்னடத்தில் நாண்ணுடி என்றும் ஆங்கிலத்தில் proverb என்றும் அழைக்கப்படுகிறது,

### பழமொழியைக்குறிக்கும் முப்பத்திநான்கு சொற்கள்:

பழகுமொழி, செலவு, வழக்கு, உரை, சொலவடை, மூதுரை, அறம், நெடுமொழி, முதுமொழி, வாய்மொழி இலக்கியம், முன்சொல்,சுலோகம், பழமொழி, முதுசொல்.

அறிவின் சுருக்கமே பழமொழி எனலாம். அது மக்களின் வாழ்வுடன் பின்னிப் பிணைந்துள்ளது. மக்களின் பண்பாட்டையும் நாகரிகத்தையும் அறிந்து கொள்ளலாம், பொருட்செறிவும் ஆழ்ந்த கருத்துக்களும் நிரம்பிய சொற்றொடர்கள் பழமொழி என்ற சொல்லில் வழங்குகின்றன.

### பழமொழியை உணர்த்தும் நூல்கள்:

தொல்காப்பியர் பழமொழியை முதுசொல், முதுமொழி என்று குறிப்பிடுகிறார். முன்றுரை அரையனாரின் பழமொழி நானூறு என்ற நூல் தமிழிலில் வெளிவந்துள்ள முதல் பழமொழி

நூலாகும், இதனைத் தொடர்ந்து பழமொழி விளக்கம் அல்லது தண்டலையார் சதகம் என்னும் நூல் வெளிவந்துள்ளது,

பழமொழி நானூறில் ‘பாம்பின் கால் பாம்பறியும்’, ‘திங்களை நாய் குரைத்தற்று’ போன்ற பழமொழிகள் இடம்பெற்றுள்ளன. 17 ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு பழமொழிகள் தொடர்பாக பல நூல்கள் வெளிவந்துள்ளன.

தமிழகப்பழமொழிகள், பழமொழி அகராதி, சமுதாய நோக்கில் பழமொழிகள், தமிழிலில் பழமொழி இலக்கியம், பழமொழிகளில் வேளாண்மை அறிவியல் போன்ற நூல்கள் குறிப்பிடத்தக்கன.

## பழமொழிகளின் வகைப்பாடுகள்:

வேளாண்மைப் பழமொழிகள், மிருகங்கள் பற்றிய பழமொழிகள், வேடிக்கைப் பழமொழிகள்

## வடிவ அமைப்பில் பழமொழிகள்:

வாக்கிய அமைப்புப் பழமொழிகள், மேற்கோள் பழமொழிகள், கேள்வி பழமொழிகள், உவமைப் பழமொழிகள்.

## சில பழமொழிகள்:

அழுதபிள்ளை பால் குடிக்கும், பேராசை பெரு நஷ்டம், திரை கடலோடியும் திரவியம் தேடு, தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்,

பழமொழிகள் வாழ்க்கையில் ஏற்படும் அனுபவங்களின் திரட்டு ஆகும். பழமொழிகள் செய்யுள் உரைநடை ஆகிய இரு வடிவத்திலும் அமைவன. பழமொழிகள் உண்மையின் அடிப்படையில் அமையவேண்டும். மக்களிடையே வழக்கத்தில் இருக்க வேண்டும். அளவில் சிறியதாக, நன்மதிப்பு உடையதாக, மக்களின் பண்பாட்டைப் பிரதிபலிப்பதாக அமையவேண்டும்.

## வினாக்கள்:

1. பழமொழிகள் என்றால் என்ன?
2. பழமொழி– விளக்கம் தருக.
3. பழமொழிகள் குறித்த நூல்களைக் குறிப்படுக

4. பழமொழிகளின் வகைப்பாடுகளை விளக்குக.
5. பழமொழிகள் சிலவற்றைக் கூறுக.
6. பழமொழிகள் குறித்து கட்டுரை வரைக.

## சந்திரஹரி - நாடகம்:

## பம்மல் சம்பந்த முதலியார்.

### நாடக மாந்தர்கள்:

பரமசிவன் - இறைவன்

சந்திரஹரி - மறவநாட்டுமன்னன்

தாசதேவன் - சந்திரஹரியின் பிள்ளை

அசத்திய கீர்த்தி - சந்திரஹரியின் மந்திரி

சிஷ்டவாசி,மித்திரவசு - இரண்டு முனிவர்கள்

ஈசநட்சத்திரன் - சிஷ்டவாசியின் சீடன்

கண்டகாலன் - ஓர் பிராம்மணன்

எம தர்மன் - தென்திசைக் கடவுள்

பாஹி வீரன் - ஓர் புலையன்

மதி சந்திரை - சந்திரஹரியின் மனைவி

கண்டிகாலி - கண்டகாலன் மனைவி

## சந்திரஹரி நாடகத்தின் கதை:

## இரண்டு முனிவர்களின் சபதம் :

எமதர்மன்,சித்திரகுப்தன்,சிஷ்டவாசி முதலானோரைக் காண்பதற்கு மித்திரவசு என்னும் முனிவர் வருகிறார். அவர் பூலோகத்தில் புதுமையைக் கண்டதாகவும் மறவநாட்டு மன்னன் சந்திரஹரி என்பவன் உண்மையே பேசாதவன்.பொய்யை எப்பொழுதும் பேசுபவன் என்கிறார்.

அதற்கு சிஷ்டவாசி பூலோகத்தில் பொய்யைமட்டுமே பேசுபவன் ஒருவனும் இருக்கமாட்டான். அவ்வாறு இருந்தால் இருவரும் தம் பெயரை மாற்றிக் கொள்ளலாம் என்கிறார். எமதர்மன் பெயரை மாற்றிக்கொள்வது பெரிய செயலல்ல என்று கூறுகிறான்.

மித்திரவசு சிஷ்டவாசியிடம் 'நீர் தோற்றுப்போனால் உம்முடைய புண்ணியத்தில் பாதியை அவனுக்குக் கொடுத்துவிட வேண்டும்' என்று கூறுகிறார். சிஷ்டவாசி 'நீர் தோற்றுப்போனால் கழுதையொன்றைக் கையில் ஏந்தி மூன்றுலோகங்களையும் சுற்றி வரவேண்டும்' என்று மித்திரவசுவிடம் கூறுகிறார்.

## சந்திரஹரியின் பொய்கள்:

சந்திரஹரி பாண்டி நாட்டிலிருந்து கொள்ளையடித்து வந்த செல்வத்தை அரசக் கருவறையில் வைக்கும்படி கட்டளையிடுகிறான். அப்பொழுது சிஷ்டவாசி முனிவர் தான் யாகம் செய்வற்கு ஒன்பது பொன் வேண்டுமென்று கேட்டபொழுது தன்னிடம் பொன்னே இல்லையென்கிறான் சிஷ்டவாசி தான் வைத்திருக்கும் ஒன்பதாயிரம் பொன்னைப்பெற்றுக்கொண்டு தான் திரும்பி வந்து கேட்கும்பொழுது தரவேண்டும் என்று கூறுகிறார். முனிவர் வாயிலைக் கடந்தவுடன் சந்திரஹரி தனக்கு அதிர்ஷ்டம் என்று கூறி, பாண்டியநாட்டிலிருந்து களவாடி வந்தவர்களுக்கு நூறு பொன் கொடுத்துவிட்டு மீதியைக் கருவறையில் வைக்கச் சொல்லுகிறான்

## சந்திரஹரி அரசுரிமையை இழத்தல்:

சிஷ்டவாசி சந்திரஹரியின் வாயிலிருந்து உண்மையை வரவழைப்பது கடினம் என்பதை உணர்ந்து அவன் அரசுரிமையைப் பறிக்க திட்டமிடுகிறார். அதனால் அவனை வேட்டையாடுவதற்காக ஆசிரமத்திற்கு அழைக்கிறார். ஆசிரமத்திற்கு வந்த சந்திரஹரி அங்கிருந்த முனிவரின் பெண்களிடம் மையல்கொண்டு திருமணம் செய்து கொள்வதாகக் கூறுகிறான். முனிவர் அப்பெண்களை அழைத்துவந்து திருமணம் செய்துகொள் என்று கூற, தான் பதி விரதன்,அப்பெண்களைத் தனக்கு யாரென்று தெரியாது என்று பொய்கூறுகிறான்.

சிஷ்டவாசி சந்திரஹரியின் நாட்டைத் தானமாகத் தரவேண்டும் இல்லையென்றால் தான்கொடுத்த ஒன்பதாயிரம் பொன்னைத் திருப்பித்தருமாறு கேட்கிறார். அவன் இல்லையென்று மறுக்க, ஒன்பதாயிரம் பொன்னைத் தரும்வரையில் இந்தநாடு தன்னுடையது என்று கூறி அவனை நாட்டைவிட்டு வெளியேற்றுகின்றார். சந்திரஹரி தன்மனைவி மகனுடன் வெளியேறினான்.

## சந்திரஹரியின் சூழ்ச்சிகள்:

சந்திரஹரியுடன் வந்த ஈசநட்சத்திரனை ஏமாற்றுவதற்கு பலவழிகளில் முயல்கிறான்.

தென்காசி கோயிலில் மதிசந்திரையை இருக்கும்படி சொல்லிவிட்டு அவளை யாராவது அடிமையாக ஏற்றுக்கொள்வார்களா என்று பார்த்துவருவதாகக் கூறி தன் அமைச்சன்

அசத்தியகீர்த்தியுடன் செல்கிறான். மதிசந்திரை ஒருபோர்வையைப் போர்த்திக்கொண்டு தான் தவத்தில் இருப்பதாகவும், தவம் கலையும் வரை யாரும்பேசக்கூடாது என்றும் தன் மகன் தாசதேவனிடம் கூறுகிறாள்.

அப்பொழுது கண்டிகாலி அங்கு வந்து தான் மிகவும் துன்பத்திலிருப்பதாகவும் அதைப் போக்கவேண்டும் என்று அழுகின்றாள். மதிசந்திரைத் தான் தவத்திலிருந்து வெளிவந்தது போல நடித்து. தன் கவலையெல்லாம் போர்வையில் மறைத்து தவத்தில் இருந்ததால் நீங்கியது என்கிறாள். கண்டிகாலியும் அதைஉண்மையென்று நம்பி, போர்வையைப் போர்த்திக்கொண்டு மௌனமானாள்.

கண்டகாலன் தன்மனைவியைத் தேடி வருகையில் சந்திரஹரி அவனிடம் ஒன்பதாயிரம் பொன்னைப் பெற்றுக்கொண்டு மதிசந்திரைக்குப் பதிலாகப்போர்வைக்குள் தவத்தில் இருந்த கண்டிகாலியை அவள் கணவனாகிய கண்டகாலனிடமே விற்றுவிடுகிறான்.ஈசநட்சத்திரனிடம் ஒன்பதாயிரம் பொன்னைத் தருகிறான்.

தன்னுடைய மந்திரியான அசத்தியகீர்த்தியிடம் ஈசநட்சத்திரனிடமிருந்து ஒன்பதாயிரம் பொன்னைக் கவர்ந்துவருமாறு கூறுகிறான். ஈசநட்சத்திரன் தான்வைத்திருந்த பொன்னைக் காணவில்லையென்று சந்திரஹரியிடம் கூறுகிறான். சந்திரஹரியோ தனக்குத் தரகு பணமாக ஆயிரம் பொன்னைக் கேட்கிறான். ஈசநட்சத்திரன் தன்னை ஆயிரம்பொன்னிற்கு யாரிடமாவது விற்கச் சொல்லுகிறான். அப்பொழுது சிஷ்டவாசி அனுப்பிய பாஹிவீரன் தான்ஈசநட்சத்திரத்தைத் தேடிவந்ததாகவும், மறவநாட்டு மன்னனை உண்மையைப் பேசவைப்பதற்காக ஆயிரம் பொன்னைக் கொடுத்ததாகவும் கூறினான். அவனிடமிருந்து ஆயிரம்பொன்னைப் பெற்றுக்கொண்டு ஈசநட்சத்திரனை மறவநாட்டு மன்னன் என்றும் அவனிடமிருந்து எப்படியாவது உண்மையை வரவழைக்குமாறும் கூறி பாஹிவீரனுன் அனுப்பிவைக்கிறான். சந்திரஹரியின் இச்செயலைக் கண்டு சிஷ்டவாசி முனிவர் திகைக்கிறார்.

### மதிசந்திரையின் சூழ்ச்சி:

மதிசந்திரையையும் தாசதேவனையும் பிடித்துக்கொண்டு வருமாறு ஈசநட்சத்திரனை முனிவர் அனுப்பி வைக்கிறார். மதிசந்திரை இதையறிந்து கொண்டு தன் மகனை பாம்பு கடித்து இறந்ததுபோல நடிக்கச் சொல்லுகின்றாள். ஈசநட்சத்திரனிடம் தன் மகன் பாம்புகடித்து இறந்துவிட்டான் என்று பொய் கூறுகிறாள். அவனை எரிப்பதற்குச் சுடுகாட்டிற்குச் சென்றபோது அங்கு புலையன் வேடத்திலிருந்த சந்திரஹரி பிணத்தை எரிப்பதற்கு காசுவேண்டும் என்று கேட்கிறான். மதிசந்திரையிடமிருந்து தாலியைப் பெற்றுக்கொள்கிறான். ஈசநட்சத்திரனிடமிருந்து வாய்க்கரிசியும் முழத்துண்டும் படிக்காசும் கேட்கிறான். அவற்றையெல்லாம் கொண்டுவர ஈசநட்சத்திரன் செல்கையில் தன் மகனையும் மனைவியையும் தப்பித்துப்போகச் சொல்கிறான்.

### சந்திரஹரியின் முடிவு:

சந்திரஹரியின் பொய் பேசும் சாகசத்தைத் தவவலிமையால் அறிந்துகொண்ட முனிவர் மதிசந்திரையை தென்காசிமன்னனின் காவலர்கள் பிடித்துக்கொண்டு செல்வதையும் அறிந்துகொள்கிறார். அரசன் விதிக்கும் தண்டனையைத் தான் நிறைவேற்றுவதாகக் கூறி மதிசந்திரையைச் சந்திரஹரியிடம் அழைத்துப்போகிறார். மதிசந்திரையை யாரென்று தனக்குத் தெரியாது என்றும் அரசனின் குழந்தையைக் கடத்திச்சென்றது சிஷ்டவாசிதான் என்றும் கூறி அவர்மீது வாளை ஓங்குகிறான். கல்மழை பொழிகிறது. சிஷ்டவாசி தன் தோல்வியை ஒப்புக்கொள்கிறார்.

**வினாக்கள்:**

1. பம்மல் சம்பந்த முதலியார் குறிப்பு வரைக.
2. பம்மல் சம்பந்த முதலியார் படைத்த நாடகங்களைக் குறிப்பிடுக.
3. பம்மல் சம்பந்த முதலியாரின் மொழிபெயர்ப்பு நாடகங்களைக் குறிப்பிடுக.
4. சம்பந்த முதலியாரின் நாடக வாழ்க்கையைக் குறிப்பிடும் நூல் எது?
5. பம்மல் சம்பந்த முதலியார் உருவாக்கிய நாடகசபையின் பெயர் என்ன?
6. சந்திரஹரி எந்த நாடகவகையைச் சேர்ந்தது?
7. சந்திரஹரி நாடகத்தில் இடம்பெற்றுள்ள கதைமாந்தர்களை குறிப்பிடுக.
8. தமிழ்நாடகத்தின் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்?
9. சிஷ்டவாசி,மித்ரவாசு மேற்கொண்ட சபதம் யாது?
10. சந்திரஹரியின் சூழ்ச்சிப் பொய்யுரைகள் குறித்து விளக்குக.
11. சந்திரஹரியை உண்மையைப் பேசவைப்பதற்காக சிஷ்டவாசி மேற்கொண்ட முயற்சிகள் யாவை?
12. மதிசந்திரையின் சூழ்ச்சிகள் யாவை?